2023 ஏப்ரல் 5]

ஒரே இடத்தில் கட்டுவதற்கு, அதாவது மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட மற்ற நீதிமன்றங்களையெல்லாம் ஒரே இடத்தில் கட்டுவதற்கு தற்போதைக்கு சாத்தியம் இல்லை. எனவேதான், நீதிமன்றங்களில் சில வாடகைக் கட்டடங்களிலும், சில சொந்தக் கட்டடங்களிலும், சில அரசுக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை வருங்காலத்தில் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 106, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

106—

மும்முனை மின்சாரம்

***11925—திரு. பெரி. செந்தில்நாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு 24 மணி நேரமும் தடையில்லா மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விவசாயிகளுடைய நலன் கருதி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையிலும், இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரையிலும் என மொத்தம் 18 மணி நேரம் மும்முனை மின்சாரத்தைத் தடையில்லாமல் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சிவகங்கை தொகுதியிலும் 18 மணி

நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தெய்வங்களான முன்னாள் முதலமைச்சர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்கி, குடிமராமத்து நாயகர், கழகத்தினுடைய பொதுச் செயலாளர், அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மிக வறட்சியான மாவட்டமாகும். ஒருபோக சாகுபடியிலேயே, விளைச்சல் வருகின்ற நேரத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுவிடுகின்றது. அம்மாவட்ட மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றார்கள். ஆற்றுப் பாசனம் இல்லை. இதுபோன்ற மாவட்டங்களைச் சிறப்பு மாவட்டங்களாகக் கருதி, 24 மணி நேரமும் இலவச மும்முனை மின்சாரம் கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கத்தை அளிக்கிறேன். ஒருசில நேரங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, அறுதலான விளைச்சல் வருகின்ற நேரங்களில், இலவச மின்சாரம் பெறுபவர்கள் பக்கத்து கிராமங்களில் பெரும்பாலும் வசதியான வீட்டுக்காரர்கள் மின் மோட்டார்கள் வைத்திருப்பார்கள்; அவர்களிடமிருந்து தண்ணீர் அடித்துக்கொள்ள வேண்டுமென்றால் அரசின் விதிகளில், அடுத்தவர்களுக்குத் தண்ணீர் அடிப்பதற்கு வழிவகை இல்லை. அதுபோன்ற மாவட்டங்களில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரடியாகப் பார்த்துவிட்டு, அடுத்தவர்களுக்குத் தண்ணீர்*

2023 ஏப்ரல் 5]

அடிப்பதற்கான அனுமதியை வழங்க வேண்டும்; அல்லது அந்த ஒரு மாத காலத்தில் மட்டும் temporary *ஆக பணம் கட்டிக்கொள்வதற்குக்கூட தயாராயிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனது வைத்தால், இதுபோன்று நடப்பதற்கு நிச்சயமாக வழிவகை ஏற்படும். இதனால், அந்த ஊரே பயன்படும். எங்களைப் போன்ற மாவட்டங்களில் ஒருபோக விளைச்சலுக்கு உத்தரவாதம் கிடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்கப்பட வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவாகும். அடிப்படைத் தேவைகளான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக்கூடிய பணிகள், குறிப்பாக சட்டமன்றத்தில் அதிகமான மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கும் 'துணை மின் நிலையம் அமைக்கவேண்டும்', 'புதிய மின்மாற்றிகள் அமைக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துகின்ற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவாக அந்தப் பணிகள் முடிந்த பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24 மணி நேரமும் விவசாயிகளுக்கு மும்முனை மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளார்கள். மொத்தம் ஒன்றரை இலட்சம் விவசாயிகளில் 3,232 விவசாயிகள் சிவகங்கை மாவட்டத்தில் பயன்பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய உங்களுடைய தொகுதியிலிருந்து 863 விவசாயிகள் இலவச மின் இணைப்பைப் பெற்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலும் ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறார். அதைத் துறை ரீதியாக ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2023 ஏப்ரல் 5*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காளையார்கோவில், நாட்டரசன்கோட்டை, பாகனேரி, பணங்குடி போன்ற ஊர்களில் தேரோட்டம் மிகப் பிரசித்திப் பெற்றது. அந்தத் தேரோடும் வீதிகளிலே இருக்கக்கூடிய, மின் கம்பிகளைப் புதைவடக் கம்பிகளாக மாற்றித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு இடங்களிலே அங்கு* low voltage *இருக்கிறது. 9 கிலோ மீட்டரிலே உள்ள கல்லல்* SS *அருகிலுள்ள வேப்பங்குளம் கிராமம், 32 கிலோ மீட்டரிலே உள்ள தேவகோட்டை* SS*–ல் தற்போது இருக்கிறது. எனவே, வேப்பங்குளம் கிராமத்தை 9 கிலோ மீட்டர் பக்கத்திலே இருக்கக்கூடிய கல்லல்* SS*–க்கு மாற்றித் தர வேண்டும். திருத்திப்பட்டி என்கிற கிராமத்திலும்* low voltage *இருக்கிறது. இந்த இரண்டையும் மாற்றித் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை தொகுதியில் மின் இணைப்புகளில் இருக்கக்கூடிய* low voltage *பிரச்சினையைச் சரிசெய்வதற்கு மூன்று புதிய துணை மின் நிலையங்களின் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அவற்றுக்கானப் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிற அந்தப் பகுதிகளில் இன்று அல்லது நாளை துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி எங்கெங்கே அந்த மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்பதை ஆராய்ந்து ஒரு வார காலத்திற்குள் அந்தப் பணிகளை நிறைவு செய்யுமாறு துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 5]

திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், மீன்சுருட்டி பகுதியில் துணை மின் நிலையமும், அதேபோன்று power grid ஒன்றும் உள்ளது. ஆனால், அந்தப் பகுதியில் குறைந்த நேரமே மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. எனவே, அந்த டெல்டா பகுதியிலே உள்ள விவசாயிகள், பல்வேறு தொழில் செய்கின்றவர்கள் பயன்பெறுகின்ற விதத்தில் 24 மணி நேரமும் மீன்சுருட்டி பகுதிக்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க, ஏற்கெனவே இரண்டு துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். கூடுதலாக இந்த ஆண்டு ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். மூன்று புதிய துணை மின் நிலையங்கள் ஜெயங்கொண்டம் தொகுதியிலே அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவர் சுட்டிக்காட்டியிருக்கின்ற பகுதிகளில் இந்தத் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்ட பிறகு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைப்பதற்கான நடவடிக்கைகளைத் துறை எடுத்திருக்கிறது* (மேசையைத் தட்டும் ஒலி) *என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருவிழாக்காலங்களாக இருப்பதால், பல்வேறு நகர்ப்புறங்களிலே தேரோட்டம் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. அப்படித் தேரோட்டம் நடைபெறுகின்ற*

அந்தப் பகுதிகளிலே மட்டும் மின்சாரத்தை நிறுத்தாமல் நகர்ப்புறப் பகுதி முழுவதும் மின்சாரம் நிறுத்தப்படுகின்ற நேரத்திலே மக்கள் அவதிப்படுகிறார்கள். கோடைக் காலமாக இருக்கின்றது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு அந்தப் பகுதியிலே மட்டும் மின்சாரத்தை நிறுத்துவதற்கானப் பணியை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தத் திருக்கோயில் என்று சொன்னால் உடனடியாக அதுகுறித்து துறையினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டு தேரோட்டம் செல்லக்கூடிய அந்தப் பகுதிகளில் மட்டும் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்குவது குறித்து உண்மையிலேயே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சிறிய மாவட்டம், வளம் நிறைந்த மாவட்டம், விவசாயிகள் அதிகமாக இருக்கக்கூடிய மாவட்டம். அந்த மாவட்டத்திலே 25 சென்ட் நிலம் இருந்தால்கூட பெரிய விவசாயி என்று சொல்லக்கூடிய சூழல் இருக்கிறது. ஆகவே 25, 30, 40 சென்ட் என்று நிலம் இருக்கக்கூடியவர்களுக்கு மின் இணைப்புகளைக் கொடுக்க, இலவச மின்சாரம் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும்

2023 ஏப்ரல் 5]

விவசாயிகள் ஏற்கெனவே இலட்சக்கணக்கானோர் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு முழுவதுமாக மின் இணைப்பு வழங்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தைத் துறை பரிசீலிக்கும். ஏனென்றால், ஏற்கெனவே நான்கரை இலட்சம் பேர் பதிவு செய்து, ஒன்றரை இலட்சம் பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கக்கூடிய விவசாயிகள், அதிகமான நிலப்பரப்பு கொண்ட, குறிப்பாக இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இன்னும் காத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

107—

பேருந்து வசதி

***18247—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, கேளம்பாக்கம்–கோவளம்–மாமல்லபுரம்–திருப்போரூர் வழியாகச் சுற்றுவட்ட பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள், சுற்றுவட்ட வழித்தடத்தில் பேருந்து கோரியுள்ளார். ஏற்கெனவே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தில்